தமிழ்ப் பல்கலைக் கழகச்

# செய்தி மலர்

மலர் : 4 — திருவள்ளுவராண்டு 2016 - ஆனி-1 15-6-1985 — இதழ் : 3

## நாடகப் பயிற்சிப் பட்டறை



கேரளம், புதுச்சேரி போன்ற மாநிலங்களி-லிருந்தும், தமிழ்நாட்டின் பல்வேறு கல்லூரிகளி-லிருந்தும் 32 ஆசிரியர்கள் கலந்துகொள்ளும் கல்-லூரி ஆசிரியர்களுக்கான நாடகப் பயிற்சிப் பட்-டறையின் துவக்க விழாவை, மே திங்கள் 22-ஆம் நாள் காலை 9.30 மணிக்குப் புதிய வளாகத்தில் அமைந்திருக்கும் 'ஆடல்வல்லான் கலைஅரங்கத் திடலில் பரதநாட்டியக் கலைஞர் திருமதி தஞ்சை கமலாம்பாள் துவக்கிவைத்தார்கள்.

"பலமொழி பேசும் ஒரு மாநிலத்தில் நுண்கலைகள் ( Plastic and Performing Arts ) காலூான்றித் தழைப்பது வரலாறு கூறும் செய்தி. சைகை மொழி மூலம் நடிப்போர் செய்திகளைக் காண்போருக்குப் பகிர்ந்தளிக்கின்றனர். பேசும் மொழி புரியாவிட்டாலும், நாம் பிற மாநிலம் அல்லது பிற நாட்டார் நாடகங்களைக் கண்டுகளிக்கின்றோமல்லவா? சைகை, முகமாற்றம், அங்க அசைவுகள்வழி காலஞ்சென்ற திரு என்.எஸ். கிருஷ்ணனின் நடிப்பை மலையாளிகளும், தெலுங்கர்களும் தமிழர்களைப் போலச்சுவைத்தனர்!" என்று தமிழ்ப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் தம் தலைமையுரையில் குறிப்பிட்டார்கள்,

இந்தக் கோடைக் காலப் பயிற்சிப்பட்டறையின் இயக்குநர் பேராசிரியர் சே. இராமானுசம் வர-வேற்க, திரு சுந்தர இராமசாமிசிறப்புரை ஆற்றினார்.

"தீவிரமான நாடக இயக்கம் தோன்ற இந்தப் பயிற்சி முகாம் ஒரு காரணமாக இருக்கவேண்டும். இதுவரைஅறிந்திராத உலகம்ஒன்று உங்கள் மனத்தில் தோன்றும்; நீங்கள் ஊர் திரும்பும்போது அந்த உலகத்தையும் எடுத்துச்செல்லுங்கள்" என்று கூறினார். முனைவர் மு. இராமசாமி நன்றி நவில விழா இனிது முடிந்தது.

—அகமுகம்

## பாம்பன் பாலம் அருகில் சோதனை ஆய்வு

மண்டபம் கடற்கரையில் பாம்பன் பாலமருகே கடலுக்கடியில் சோதனை அகழாய்வு ஒன்றுநடத்தப் பெற்றது. தமிழ்ப் பல்கலைக் கழக நீரகழாய்வு மையத் தலைவர் கேப்டன் எட்வர்ட் பூபாலராயன் கடலில் மூழ்குவோர் உதவியுடன் பாம்பன் பாலம் அருகிலுள்ள பழைய விநாயகர் கோயில் எதிரில் தோணித்துறைப் பகுதியில் கடலில் இவ்வாய்வை நடத்தினார். சில பழைய மரத் துண்டுகளும், இரும்புப் பொருள்களும், மட்பாண்டத் துண்டுகளும் இவ்வகழாய்வில் கண்டெடுக்கப்பட்டன. காலநிலை சரியில்லாததாலும் கடுங்காற்று வீசியதாலும் 8.4.'85 அன்று தொடங்கிய சோதனை அக-ழாய்வு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

—செ. இரெ. செயச்சந்திரன்,
நீரகழாய்வு மையம், மண்டபம் முகாம்.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

# செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/82

இ.அ.அ. மட்டும்.

நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராஜா சரபோஜி
சரஸ்வதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 007.
தமிழ்நாடு - இந்தியா.

## பிற நிறுவன நல்கைகள்

### பல்கலைக் கழக மானியக்குழு நல்கைகள்

| | | |
|---|---|---|
| 1. | கணிப்பொறி பயிற்சி வகுப்பு | உரு.1,06,050 |
| 2. | கோடைக்கால நாடகப் பயிற்சிப் பட்டறை | 83,250 |
| 3. | மொழியியல் கோடைப்பள்ளி | 76,457 |
| 4. | அறிவியற் சொல்லாக்கத் தொகுப்புக் கருத்தரங்கம் பகுதி 2. | 29,100 |
| 5. | அகராதிப் பட்டறை | 13,760 |

### மைய அரசு கல்வி மற்றும் பண்பாட்டுத் துறை நல்கைகள்

| | |
|---|---|
| பொம்மலாட்டத்தின் வாயிலாக மெய்யசைவு குரல் ஒருங்கிணைப்பு பட்டறை | 15,000 |

### இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழக நல்கைகள்.

| | |
|---|---|
| நீரிழிவு நோய் மூன்றாண்டுத் திட்டம் (1,50,000 - நல்கை) | 49,240 |
| மஞ்சட்காமாலை நோய்—மூலிகை வாயிலாக குணமாக்குதல் தொடர்பான ஆய்வு | 36,000 |

## நாணயங்கள் அன்பளிப்பு

நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த தங்கம்மாள்புரம், இந்து கணபதி நடுநிலைப்பள்ளி ஆசிரியர் திரு எஸ். எஸ். போத்தையா அவர்களும், அப்பள்ளி மாணவ மாணவியர்களும் சேகரித்த 89 பல்வேறு நாட்டு நாணயங்களைத் தமிழ்ப் பல்கலைக் கழக அருங்காட்சியகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

அப்பள்ளி நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவ,மாணவியர்களுக்குத் தமிழ்ப் பல்கலைக் கழக அருங்காட்சியகம் தன்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

—அருங்காட்சியகப்

## தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்.

1. *Tamil Literature* — Prof.M.S.Purnalingam Pillai — ரூ. 85/— U.S.$ 17
2. மொழி நூல் — மாகறல் கார்த்திகேய முதலியார் — உரூ. 75/—
3. *Tamil University Machine Translation System (TUMTS)* — Co - authors : K.C.Chellamuthu K.Rangan K.Murugesan — Rs. 75/— U.S.$ 15
4. *A Study on the Thanjavur Art Plate* — Prof.P.Saravanavel — Rs. 60/— U.S.$ 12
5. நாமதீப நிகண்டு — கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர் — உரூ. 68/—
6. மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — பேரா.கா.சுப்பிரமணிய பிள்ளை — உரூ. 45/—
7. *Indians in South Africa* — Prof.K.Nambi Arooran — Rs.60/— U.S.$ 12

### பத்துப் பாட்டு (ஆங்கில மொழி பெயர்ப்புடன்)

ஆசிரியர் : ஜே.வி. செல்லையா

அருள்திரு விபுலானந்த அடிகளார், பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை ஆகிய அறிஞர்களின் முன்னுரை கொண்ட மொழி பெயர்ப்பு நூல்.

தமிழ்ச்செய்யுளும் உரிய ஆங்கிலமொழி பெயர்ப்பும் கொண்டது.

பக்கம் 370 விலை. உரூ. 85/17 டாலர்

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.
அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் — 613 001.